# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2024 – 2025

## வளர்தமிழ் 11

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100


www.tamiledc.com

Tamil Education Development Council
France

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. மக்களாயினும் மன்னராயினும் அறநெறி பிழைத்தோர் துன்புறுவர் என்ற கருத்தை விளக்கும் நூல்

அ) வளையாபதி ☐ ஆ) திரிகடுகம் ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ) அழகின்சிரிப்பு ☐

2. ஓரிறைவன் என்பது

அ) வினைத்தொகை ☐ ஆ) உவமைத்தொகை ☐

இ) பண்புத்தொகை ☐ ஈ) உம்மைத்தொகை ☐

3. கண்ணகி தன் கணவனை இழந்த நாடு

அ) சோழநாடு ☐ ஆ) சேரநாடு ☐

இ) வளநாடு ☐ ஈ) பாண்டியநாடு ☐

4. எலி வாழும் இடம்

அ) குகை ☐ ஆ) பந்தி ☐

இ) வளை ☐ ஈ) பட்டி ☐

5. இடைத்தொடர்க்குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டு

அ) மூழ்கு, சால்பு ☐ ஆ) கயிறு, அரசு ☐

இ) உப்பு, பேச்சு ☐ ஈ) பண்பு, கன்று ☐

6. நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற ஆண்டு

அ) 1994 ☐ ஆ) 1984 ☐

இ) 1974 ☐ ஈ) 1964 ☐

7. __________ சிரிப்பில் இறைவன் மகிழ்வதாக கவிஞர் இரவி குறிப்பிடுகின்றார்.

அ) செல்வந்தரின் ☐ ஆ) ஏழைகளின் ☐

இ) உறவினரின் ☐ ஈ ) நண்பரின் ☐

8. கல் + குகை

அ) கற்குகை ☐ ஆ) கல்குகை ☐

இ) கட்குகை ☐ ஈ ) கள்குகை ☐

9. பின்வருவனவற்றுள் வினையாலணையும் பெயர்

அ) படித்தான் ☐ ஆ) படிக்கிறான் ☐

இ) படித்த ☐ ஈ ) படித்தவன் ☐

10. தவில் வித்துவான் தட்சணாமூர்த்தி பிறந்த ஊர்

அ) உடுவில் ☐ ஆ) இணுவில் ☐

இ) நல்லூர் ☐ ஈ ) கந்தரோடை ☐

11. தொல்காப்பியம் தொல்காப்பியரால் எழுதப்பட்டது. இதில் எழுதப்பட்டது என்பது

அ) செய்வினை ☐ ஆ) பிறவினை ☐

இ) தன்வினை ☐ ஈ ) செயப்பாட்டுவினை ☐

12. யாழ்நூலகம் அனலுக்குள் பொசுங்குவதைக் கேள்வியுற்று அதிர்ச்சியில் உயிர்நீத்தவர்

அ) அல்பிரட்துரையப்பா ☐ ആ) எசு.ஆர் இரங்கநாதன் ☐

இ) தாவீதுஅடிகளார் ☐ ஈ ) க.மு செல்லப்பா ☐

13. எதிர்மறை ஏவல் ஒருமையைக் குறிக்கும் சொல்

அ) படியுங்கள் ☐ ஆ) எடுக்காதே ☐

இ) நட ☐ ஈ) சென்ற ☐

14. இடித்துரைத்தல் என்ற மரபுச்சொற்றொடர் உணர்த்தும் பொருள்

அ) எதிர்த்துப்பேசுதல் ☐ ஆ) கவனமாக இருத்தல் ☐

இ) மூடி மறைத்தல் ☐ ஈ) அறிவுரை கூறுதல் ☐

15. மன்னவன் செய்த தீங்கை ஏற்றுக்கொண்டு வாழ்வேனா? எனக் கூறியவர்

அ) கண்ணகி ☐ ஆ) மாதவி ☐

இ) மாதரி ☐ ஈ) ஐயை ☐

16. எமது உள்ளத்தில் நாட்டின் நினைப்பையும் வீரருடைய எண்ணத்தையும் தோற்றுவிக்கும் கல்

அ) படிக்கல் ☐ ஆ) நடுகல் ☐

இ) வைரக்கல் ☐ ஈ) சாமிக்கல் ☐

17. கழககால மன்னர்கள் கொடையில் சிறந்து விளங்கினர். இச் சொல்லியத்தில் 7ஆம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) விளங்கினர் ☐ ஆ) மன்னர்கள் ☐

இ) கொடை ☐ ஈ) சிறந்து ☐

18. குழந்தை தொட்டிலில் உறங்கியது. இதில் உறங்கியது என்பதன் எதிர்ச்சொல்

அ) விழித்தது ☐ ஆ) தூங்கியது ☐

இ) அழுதது ☐ ஈ) விளையாடியது ☐

19. மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்ற இடம்

அ) வேலூர் ☐ ஆ) காஞ்சி ☐
இ) மதுரை ☐ ஈ) பூம்புகார் ☐

20. யாழ்நூலகத்தின் முன்றலில் ________ க் கலைமகள் படிமம் காணப்படுகிறது.

அ) பச்சைப்பசேலென ☐ ஆ) செக்கச்செவேலென ☐
இ) கன்னங்கரியவென ☐ ஈ) வெள்ளைவெளேரென ☐

21. காதலரைக் களிப்பூட்டும் இளவேனில்விழா

அ) வைரவிழா ☐ ஆ) இந்திரவிழா ☐
இ) பொன்விழா ☐ ஈ) வெள்ளிவிழா ☐

22. அபிசேகம் என்ற வடசொல்லின் தமிழ்ச்சொல்

அ) அருள் ☐ ஆ) நீராட்டு ☐
இ) மாவாரி ☐ ஈ) வேண்டுதல் ☐

23. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்

அ) சிரி ☐ ஆ) மூக்கு ☐
இ) நீந்து ☐ ஈ) பாய் ☐

24. காவேரியைப் பெண்ணாக உருவகித்துப் பாடியவர்

அ) மாடலன் ☐ ஆ) கோவலன் ☐
இ) மாநாய்கன் ☐ ஈ) மாசாத்துவன் ☐

25. தவில் ____________ மரத்தினால் செய்யப்படுகின்றது.

அ) மா ☐ ஆ) விளா ☐
இ) பலா ☐ ஈ) கமுகு ☐

புள்ளிகள் 25

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

வேலுநாச்சியார் இந்தியாவில் பிறந்தார். இவர் சிறு அகவையிலிருந்தே வாள்வீச்சு, விற்பயிற்சி, சிலம்பம், குதிரை ஏற்றம் போன்ற போர்ப்பயிற்சிகளைக் கற்றார். இவர் சிவகங்கையின் மன்னரான முத்துவடுகநாதரை மணந்து அரசியானார். அப்போது ஆங்கிலேயர் நாட்டின் ஒவ்வொரு பகுதியாகக் கைப்பற்றத் தொடங்கினர். மேலும் ஆளும் மன்னர்களை வரி செலுத்தும்படியும் கட்டளையிட்டனர். வரி கட்டுவதற்கு மறுப்புத் தெரிவித்த முத்துவடுகநாதரை அழிக்க முனைந்தனர் ஆங்கிலேயர். ஒரு நாள் முத்துவடுகநாதரும் வேலுநாச்சியாரும் கோவிலில் இறைவழிபாட்டில் நின்றபோது ஆங்கிலேயர் மறைந்திருந்து தாக்கியதில் மன்னன் அவ்விடத்திலே உயிர் இழந்தான். உடனே விரைந்து ஓடிச் சென்று குதிரையில் ஏறிய வேலுநாச்சியார் சிவகங்கை நோக்கிச் சென்றாள். அரசி காட்டுப்பகுதிக்குள் சென்று கொண்டிருந்தபோது ஆடு மேய்த்துக் கொண்டிருந்த உடையாள் என்னும் சிறுமியிடம் சிவகங்கை செல்வதற்கு வழி கேட்டாள். அச்சிறுமியும் வந்திருப்பது தங்கள் அரசி என்பதை அறிந்து பாதுகாப்பாகச் செல்ல வழி கூறி அனுப்பி வைத்தாள். சிறிது நேரத்தில் அங்கே வேலுநாச்சியாரைத் தேடிவந்த ஆங்கிலேயர் அச்சிறுமியிடம் இவ்வழியால் வந்த வேலுநாச்சியாரைக் கண்டாயா? எனக் கேட்க சிறுமி விடை கூற மறுத்ததால் அவளை வாளால் வெட்டிக் கொன்றனர். இதைக் கேள்வியுற்ற வேலுநாச்சியார் ''சிவகங்கையை ஆங்கிலேயரிடமிருந்து மீட்பேன்'' எனச் சூளுரைத்தாள். இதற்காகப் படை திரட்டிப் போராடி ஆங்கிலேயரை வென்று இழந்த மண்ணை மீட்டு வெற்றிக் கொடி நாட்டினாள். வேலுநாச்சியார் இறுதியில் தனக்காக உயிர் இழந்த உடையாள் என்ற சிறுமி இறந்த இடத்திற்குச் சென்று அவள் நினைவாக கோவில் ஒன்றைக் கட்டி 'வெட்டுடையாள் காளி அம்மன்' என்ற பெயரையும் சூட்டினாள்.

1. ஏன் முத்துவடுகநாதரை ஆங்கிலேயர் அழிக்க முனைந்தனர்?

2. வேலுநாச்சியார் உரைத்த சூழுரையைத் தருக.

3. உடையாள் என்னும் சிறுமியை வாளால் வெட்டிக் கொன்றவர் யார்?

4. வேலுநாச்சியார் கற்ற போர்ப்பயிற்சிகள் எவை?

5. ஆங்கிலேயரை வென்று இழந்த மண்ணை மீட்டு வெற்றிக்கொடி நாட்டியவர் யார்?

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. “தென்னவர் செங்கோல் என்னால் வளைந்ததே” என யாரால் கூறப்பட்டது?

_______________________________________________

2. ஒருவருடைய இன அடையாளத்தைக் காட்டுவது எது என அம்பி கூறுகின்றார்?

_______________________________________________

3. காய்கதிர்ச் செல்வன் என கண்ணகி யாரைக் குறிப்பிடுகின்றார்?

_______________________________________________

4. கழக இலக்கியங்கள் குறைந்த சொல்லாட்சியுடன் அமைந்ததற்கான கரணியம் யாது?

_______________________________________________

5. ‘நெஞ்சையள்ளும் மணியாரம்’ எனப் புகழப்படும் நூல் எது?

_______________________________________________

6. சோழநாட்டின் எல்லையாக அமைந்த ஆற்றின் பெயர் என்ன?

_______________________________________________

7. யாழ்நூலகக் கட்டிடத்திற்கான வரைபடத்தை வடிவமைத்தவர் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1.



2. தம்மை உருக்கி தமிழருக்கு - ஒளி
   தந்த எம் மாவீரர்களே!

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

மார்கழி மாதக் குளிர்காற்று சில்லென்று வீசியது. பாயிலே சுருண்டு படுத்திருந்த மயில்வாகனம் கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்தார். அந்நேரம் மரத்தில் ஏறியிருந்த சேவல் இடைவிடாது கூவியது. பறவையின் இனிய ஒலிகள் காற்றுடன் கலந்தது. விடிவெள்ளி கிழக்கு வானில் ஒரு பனைமரம் அளவு உயரத்தில் தெரிந்தது. இவற்றைக் கேட்டும் பார்த்தவாறும் கிணறு அருகே சென்ற மயில்வாகனம் சில்லிடும் நீரிலே முகத்தைக் கழுவினார். அவ்வேளை கோவில் மணியோசை ஊரெல்லாம் பரவியது. அந்த இனிய இசையைக் கேட்டு மகிழ்ந்த மயில்வாகனம் நேரம் நாலரை ஆகிவிட்டது எழும்புஎழும்பு என்று மகனை எழுப்பினார்.

1. அகச்சுட்டு ஒன்று தருக.

______________________________

2. கிணறு எவ்வகைக் குற்றியலுகரம்?

______________________________

3. 7 ஆம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைத் தருக.

______________________________

4. காலப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

5. மணியோசை என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.

______________________________

6. சிறப்புப் பெயரோடு பொதுப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

7. இங்கு வந்துள்ள பெயரெச்சம் எது?

_______________________________________________

8. அவ்வேளை என்பது எவ்வகைச் சுட்டு?

_______________________________________________

9. அடுக்குத்தொடர் ஒன்று தருக.

_______________________________________________

10. காரணப்பெயர் ஒன்று தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வருவன எவ்வகைத் தொகை எனக் கண்டறிந்து எழுதுக.**

1. கயல்விழி _______________________
2. ஏவுகணை _______________________
3. பொற்றொடி வருகிறாள். _______________________

புள்ளிகள் 03

**2. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.**

பொதுமொழி _______________________

பிறவினை _______________________

புள்ளிகள் 02

6) **தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

| |
|---|
| அழுகிறது அடி ஆடு நஞ்சு அளவுக்கு சறுக்கும் நனைகிறதென்று அமுதமும் ஓநாய் மணக்கும் அடுப்பங்கரை யானைக்கும் நாரும் சூடுகண்ட சேர்ந்த பூனை மிஞ்சினால் பூவுடன் நாடாது |

1. ஏமாற்றி அழிக்கும் செயல்.

______________________________

2. எதற்கும் எல்லை உண்டு.

______________________________

3. பேராற்றலும் தோற்கும்.

______________________________

4. பட்டறிவின் பயன்.

______________________________

5. இணைவின் பயன்.

______________________________

புள்ளிகள் 05

**7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. தோட்டத்தில் ____________________ பிடுங்கிய உழத்தி வீட்டுக்கு வந்ததும் தொலைக்காட்சியில் ____________________ நிகழ்ச்சியைப் பார்த்தாள்.

   ( கலை, களை )

2. மண்ணில் ____________________ விளையாடிய சிறுமியைக் காணவில்லை எனக் கதறிய தாய் அங்கும்இங்கும் ____________________ தேடித் திரிந்தாள்.

   ( அலைந்து, அளைந்து )

3. காட்டு ____________________ சென்று கொண்டிருந்தபோது வயிற்று ____________________ துடித்த முதியவர் அங்கு நின்ற இளைஞனிடம் உதவி கேட்டார்.

   ( வழியால், வலியால் )

4. போரில் பகைவரை ____________________ வெற்றி பெற்ற மன்னன் அரண்மனைக்கு வந்தபோது அங்கு வந்திருந்த புலவரைக் கண்டதும் அவருக்குப் பொன்னும் பொருளும் ____________________ மகிழ்ந்தான்.

   ( அழித்து, அளித்து )

5. உழவர்கள் ____________________ நெல்லை அதிக ____________________ விற்றதும் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினர்.

   ( விலைக்கு, விளைந்த )

புள்ளிகள் 05

**8) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.**

1. நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்

   இல்லெனினும் ______________________ நன்று

   ( ஏற்றலே, ஈதலே, கற்றலே )

2. இன்னாமை ______________________ எனக்கொளின் ஆகும்தன்

   ஒன்னார் விழையும் சிறப்பு

   ( இன்பம், துன்பம், வன்மம் )

புள்ளிகள் 05

9) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இக்காலக் கவிதை இலக்கியங்கள்
- யாழ்நூலகம்
- புலம்பெயர் தேசத்தில் தமிழ்க்கல்வி
- 2024 இல் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி பற்றி உமது உறவினருக்கு ஓர் அஞ்சல் எழுதுக.

புள்ளிகள் 15